**செ.வெ.எண்: 56** **நாள்: 20.02.2017**

# பத்திரிகைசெய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும், கால்நடை பராமரிப்புத் துறையினரால் 12-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசிப்பணி 01.03.2017 முதல் 21.03.2017 முடிய 21 நாட்கள் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையும் மற்றும் மதியம் 3.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. தடுப்பூசிப்பணிக்குழு கிராமங்களுக்கு வருகை தரும் நாள் விபரம் அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுசமயம் கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை தவறாது போட்டு கால்நடைகளை கோமாரி நோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**